Government of India
Press Information Bureau
International Year of Cooperatives 2025
Cooperatives Build a Better World

# JIPMER's Urban and Rural Health Centres Conduct Pulse Polio Immunization Drive

Posted On: 21 DEC 2025 6:32PM by PIB Chennai

In line with the nationwide Pulse Polio Programme, the Urban and Rural Health Centres of JIPMER successfully conducted the Pulse Polio Immunization (PPI) camp on 21 December 2025 across their service areas.




The immunization drive was carried out as part of India's continuous commitment to remain polio-free, under the guidance of the Ministry of Health and Family Welfare (MoHFW), Government of India, and the National Health Mission (NHM). Oral Polio Vaccine (OPV) was administered to all eligible children under five years of age through specially established booths as well as through house-to-house visits to ensure maximum coverage.



Medical officers, interns, nursing staff, and field-level health personnel from JIPMER actively participated in the campaign. Special emphasis was placed on reaching every child, including those in hard-to-reach and vulnerable communities, reinforcing the message that "no child should be left behind."

JIPMER reiterates its strong commitment to national public health initiatives and applauds the dedication of all healthcare workers, volunteers, and community members who contributed to the successful implementation of the Pulse Polio Programme today.

Link: https://www.pib.gov.in/PressReleseDetail.aspx?PRID=2207222&reg=6&lang=1

Government of India

Press Information Bureau

2025 International Year of Cooperatives

Cooperatives Build a Better World

# ஜிப்மரின் நகர்ப்புற மற்றும் கிராமப்புற சுகாதார மையங்களில் போலியோ சொட்டு மருந்து முகாம் நடைபெற்றது

இடுகை இடப்பட்ட நாள்: 21 DEC 2025 4:41PM by PIB Chennai

நாடு தழுவிய போலியோ சொட்டு மருந்து இயக்கத்தின் ஒருபகுதியாக, ஜிப்மரின் நகர்ப்புற மற்றும் கிராமப்புற சுகாதார மையங்கள் இன்று (21 டிசம்பர் 2025) அதன் சேவைப் பகுதிகள் முழுவதும் போலியோ சொட்டு மருந்து முகாமினை சிறப்பாக நடத்தின.




இந்திய அரசின் சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகம் (MoHFW) மற்றும் தேசிய சுகாதார இயக்கம் (NHM) ஆகியவற்றின் வழிகாட்டுதலின் கீழ், போலியோ இல்லாத நாடாக திகழும் இந்தியாவின் தொடர்ச்சியான உறுதிப்பாட்டின் ஒரு பகுதியாக இந்த நோய்த்தடுப்பு இயக்கம் மேற்கொள்ளப்பட்டது. பிரத்யேகமாக அமைக்கப்பட்ட முகாம்கள் மற்றும் வீடு வீடாகச் சென்று, ஐந்து வயதுக்குட்பட்ட தகுதியுள்ள அனைத்து குழந்தைகளுக்கும் வாய்வழி போலியோ சொட்டு மருந்து (OPV) வழங்கப்பட்டது.



ஜிப்மரைச் சேர்ந்த மருத்துவ அலுவலர்கள், பயிற்சி மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் சுகாதாரப் பணியாளர்கள் இந்த முகாமில் பங்கேற்றனர். எளிதில் சென்றடைய முடியாத மற்றும் அதிகம் பாதிக்கப்படக்கூடிய சமூகங்களில் உள்ள குழந்தைகள் உட்பட, ஒவ்வொரு குழந்தையையும் சென்றடைவதற்கு சிறப்பு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. இதன் மூலம், "எந்தக் குழந்தையும் விடுபட்டுவிடக் கூடாது" என்ற செய்தி வலியுறுத்தப்பட்டது.

தேசிய பொது சுகாதார முயற்சிகளுக்கான தனது உறுதியான அர்ப்பணிப்பை ஜிப்மர் மீண்டும் வலியுறுத்துகிறது. மேலும், இன்று போலியோ சொட்டு மருந்துத் திட்டத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்த பங்களித்த அனைத்து சுகாதாரப் பணியாளர்கள், தன்னார்வலர்கள் மற்றும் சமூக உறுப்பினர்களின் அர்ப்பணிப்பைப் பாராட்டியது.

Link: https://www.pib.gov.in/PressReleasePage.aspx?PRID=2207192&reg=6&lang=11

THE TIMES OF INDIA

# Jipmer's HTA bags silver award at 2025 HTA conclave

Dec 21, 2025, 00:19 IST

Share | AA | Select TOI as




TNN

Puducherry: The health technology assessment (HTA) regional resource hub of Jawaharlal Institute of Postgraduate Medical Education and Research (Jipmer) has won a silver award at the 2025 HTA conclave, New Delhi. The award was presented by Niti Aayog member (health) V K Paul, and Rajeev Bahl presented the award to the institute during the HTA Conclave Arise 2025 held on Dec 17 in Sushma Swaraj Bhavan in New Delhi.

HTA involves the systematic and transparent evaluation of health technologies, including medicines, vaccines, diagnostic devices, healthcare delivery models, and programmes, to ensure that health system decisions are equitable, efficient, and cost-effective, said Jipmer professor (preventive and social medicine) Sitanshu Sekhar Kar, who leads the hub.

The ecosystem of Health Technology Assessment in India (HTAIn) was established in 2017 as an attached office of the department of health research, Union health and family welfare ministry. A total of 28 HTA resource hubs and centres are currently operational in India.

Link: https://timesofindia.indiatimes.com/city/chennai/jipmers-hta-bags-silver-award-at-2025-hta-conclave/articleshow/126097565.cms

THE NEW INDIAN EXPRESS

# JIPMER bags award for evidence-based policymaking

EXPRESS NEWS SERVICE
@ Puducherry

THE Health Technology Assessment (HTA) India Regional Resource Hub at the Jawaharlal Institute of Postgraduate Medical Education and Research (JIPMER), Puducherry, has won the Silver Award for 2025 in recognition of its sustained contribution to evidence-based health policymaking in the country.

The award was presented at the HTA Conclave ARISE 2025, held at Sushma Swaraj Bhavan in New Delhi on December 17. It was conferred by NITI Aayog Member (Health) Dr V K Paul and Department of Health Research Secretary Dr Rajeev Bahl. Health Technology Assessment involves the systematic evaluation of medicines, vaccines, diagnostic tools, healthcare delivery models and public health programmes to support efficient and equitable health system decisions.

The HTA in India framework was set up in 2017 under the Department of Health Research and currently has 28 resource hubs nationwide.

JIPMER hosts one of eight Regional Resource Hubs. Established as a resource centre in 2019, it was upgraded in 2024. The hub has completed 29 studies, is undertaking 10 ongoing projects, conducted 35 capacity-building programmes and published 24 research papers.

JIPMER Director Dr Vir Singh Negi said the award reflected the team's scientific rigour and the institution's commitment to national health priorities.

தினகரன்
டிசம்பர் 22, 2025 திங்கட்கிழமை

## தேசிய அளவில் சான்றுகள் அடிப்படையில்

# ஜிப்மரின் செயல்பாடுகளுக்கு தேசிய விருது



புதுச்சேரி, டிச. 22: தேசிய அளவில் சான்றுகள் அடிப்படையில் சுகாதார கொள்கைகளுக்கு ஜிப்மரின் செயல்பாடு, பங்களிப்புகளுக்கு தேசிய அளவில் விருது கிடைத்துள்ளது. ஜிப்மரின் சுகாதார தொழில்நுட்ப மதிப்பீட்டு மையத்திற்கான இந்த விருதை நிதி ஆயோக் உறுப்பினர் (சுகாதாரம்) டாக்டர் பால், தேசிய சுகாதார ஆராய்ச்சித்துறையின் செயலாளர் டாக்டர் ராஜீவ் பாகல் ஆகியோர் டெல்லியில் நடைபெற்ற சுகாதார தொழில்நுட்ப மதிப்பீடு மாநாட்டில் வழங்கியுள்ளனர்.

சுகாதார தொழில்நுட்ப மதிப்பீடு என்பது மருந்துகள், தடுப்பூசிகள், நோய் கண்டறியும் சாதனங்கள், சுகாதார சேவை வழங்கும் மாதிரிகள் உள்ளிட்ட சுகாதார தொழில்நுட்பங்களின் முறைபடுத்தப்பட்ட, வெளிப்படையான மதிப்பீடாகும். இந்தியாவில் மொத்தம் 28 சுகாதார தொழில்நுட்ப வளமையங்கள் மற்றும் ஆராய்ச்சிக் கூடங்கள் செயல்பட்டு வருகின்றன.

ஜிப்மர் சுகாதார தொழில்நுட்ப வளமையமாக அங்கீகரிக்கப்பட்டு தற்போதுவரை இம்மையம் 29 ஆராய்ச்சி திட்டங்களை நடத்தியுள்ளது. சர்வதேச அளவில் தனது ஆராய்ச்சி முடிவுகளையும் கட்டுரைகளாக வெளியிட்டுள்ளது. இம்மையம் ஜிப்மரின் நோய் தடுப்பு, சமூக மருத்துவத் துறை தலைவர் டாக்டர் சித்தான்சு சேகர் கர் தலைமையில் பல்வேறு துறைகளைச் சார்ந்த நிபுணர்கள் அடங்கிய குழுவினரால் செயல்பட்டு வருகிறது.

ஜிப்மர் இயக்குனர் டாக்டர் வீர சிங் நேகி, ஜிப்மரின் பிராந்திய வளமையத்தின் தலைமைத்துவம், அறிவியல் துல்லியம், செயல்பாடுகளை பாராட்டியுள்ளார். தனது பங்களிப்பை தொடர்ந்து, அளித்து வருவதோடு நாட்டின் முக்கிய சுகாதார முடிவுகளில் தனது ஆராய்ச்சி திறன் மூலம் வலுவான இடத்தையும் பெற்றுள்ளது என்று குறிப்பிட்டார்.

தினமணி

# குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து

புதுச்சேரி, டிச21: புதுச்சேரியில் 5 வயதுக்கு உள்பட்ட குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்கும் முகாம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

புதுச்சேரி முதல்வர் என்.ரங்கசாமி, திலாசுபேட்டை அரசு பெண்கள் பள்ளியில் நடைபெற்ற நிகழ்வில் 5 வயதுக்கு உள்பட்ட குழந்தைக்கு போலியோ சொட்டு மருந்து வழங்கி, இப் பணியைத் தொடங்கிவைத்தார்.

அப்போது எம்எல்ஏக்கள் ஏ.கே.டி.வி.ஆறுமுகம், கே.எஸ்.பி.ரமேஷ் மற்றும் சுகாதாரத் துறை அதிகாரிகள் உடனிருந்தனர்.

புதுச்சேரி சுகாதாரத் துறை மூலம் இந்த ஆண்டு மாநிலத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் காலை 7 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை 5 வயது வரையுள்ள அனைத்து குழந்தைகளுக்கும் போலியோ சொட்டு மருந்து வழங்கப்படுகிறது.



புதுச்சேரி திலாசுபேட்டை அரசு பெண்கள் பள்ளியில் 5 வயதுக்கு உள்பட்ட குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்கிய முதல்வர் என்.ரங்கசாமி. உடன் எம்எல்ஏ ஏ.கே.டி.வி.ஆறுமுகம், கே.எஸ்.பி.ரமேஷ் உள்ளிட்டோர்.

மணவெளி தொகுதியில் உள்ள தவளக்குப்பம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் சட்டப்பேரவைத் தலைவர் ஆர்.செல்வம் குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்கி, தொடங்கிவைத்தார்.

ஜிப்மர் நகர்ப்புற மற்றும் கிராமப்புற சுகாதார மையங்களில் போலியோ சொட்டு மருந்து வழங்கும் முகாம் நடைபெற்றது. இதில், ஜிப்மர் மருத்துவ அதிகாரிகள், பயிற்சி மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் சுகாதாரப் பணியாளர்கள் பங்கேற்றனர்.

இந்து தமிழ் திசை

# புதுவையில் போலியோ சொட்டு மருந்து முகாம்

## முதல்வர் ரங்கசாமி தொடங்கி வைத்தார்

புதுச்சேரி

புதுவையில் போலியோ சொட்டு மருந்து முகாமை திலாசுபேட்டை அரசு பெண்கள் பள்ளியில் முதல்வர் ரங்கசாமி நேற்று தொடங்கி வைத்தார்.

அனைத்து பகுதிகளிலும் காலை 7 மணி முதல் மதியம் 3 மணி வரை 5 வயது வரை உள்ள அனைத்து குழந்தைகளுக்கும் போலியோ மருந்து சொட்டு மருந்து கொடுக்கும் பணி நடந்தது.

புதுவை மாநிலத்தை சேர்ந்த 74 ஆயிரத்து 698 குழந்தைகளுக்கு சொட்டு மருந்து வழங்க இலக்கு நிர்ணயித்தனர்.

கிராமம் மற்றும் நகர்ப்புறங்களில் 425 முகாம்களிலும், பொது மக்கள் அதிகம் கூடும் பேருந்து [illegible] கள் மற்றும் வணிக வளாகங்களில் 31 இடங்கள், ஜிப்மர் நகர்ப்புற மற்றும் கிராமப்புற சுகாதார மையங்களில் போலியோ சொட்டு மருந்து வழங்கும் முகாம் நடைபெற்றது.



புதுவையில் போலியோ சொட்டு மருந்து முகாமை முதல்வர் ரங்கசாமி தொடங்கி வைத்தார். உடன் அரசு கொறடா ஏகேடி.ஆறுமுகம், எம்எல்ஏ ரமேஷ். படம்: எம்.சாம்ராஜ்

மக்கள் பிரதிநிதி

# ஜிப்மரின் நகர்ப்புற மற்றும் கிராமப்புற சுகாதார மையங்களில் போலியோ சொட்டு மருந்து முகாம் நடைபெற்றது




நாடுதழுவியபோலியோ சொட்டு மருந்து இயக்கத்தின் ஒருபகுதியாக, ஜிப்மரின் நகர்ப்புற மற்றும் கிராமப்புறசுகாதாரமையங்கள் இன்று (21 டிசம்பர் 2025) அதன் சேவைப் பகுதிகள் முழுவதும் போலியோ சொட்டு மருந்து முகாமினை சிறப்பாக நடத்தின.

இந்திய அரசின் சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகம் (MoHFW) மற்றும் தேசிய சுகாதார இயக்கம் (NHM) ஆகியவற்றின் வழிகாட்டுதலின் கீழ், போலியோ இல்லாத நாடாக திகழும் இந்தியாவின் தொடர்ச்சியான உறுதிப்பாட்டின் ஒரு பகுதியாக இந்த நோய்த்தடுப்பு இயக்கம் மேற்கொள்ளப்பட்டது.

பிரத்யேகமாக அமைக்கப்பட்ட முகாம்கள் மற்றும் வீடு வீடாகச் சென்று, ஐந்து வயதுக்குட்பட்ட தகுதியுள்ள அனைத்து குழந்தைகளுக்கும் வாய் வழி போலியோ சொட்டு மருந்து (OPV) வழங்கப்பட்டது.

ஜிப்மரைச் சேர்ந்த மருத்துவ அலுவலர்கள், பயிற்சி மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் சுகாதாரப் பணியாளர்கள் இந்த முகாமில் பங்கேற்றனர்.

எளிதில் சென்றடைய முடியாத மற்றும் அதிகம் பாதிக்கப்படக்கூடிய சமூகங்களில் உள்ள குழந்தைகள் உட்பட, ஒவ்வொரு குழந்தையையும் சென்றடைவதற்கு சிறப்பு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. இதன்மூலம், "எந்தக் குழந்தையும் விடுபட்டுவிடக் கூடாது" என்ற செய்தி வலியுறுத்தப்பட்டது.

தேசிய பொது சுகாதார முயற்சிகளுக்கான தனது உறுதியான அர்ப்பணிப்பை ஜிப்மர் மீண்டும் வலியுறுத்துகிறது. மேலும், இன்றுபோலியோ சொட்டு மருந்துத் திட்டத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்த பங்களித்த அனைத்து சுகாதாரப் பணியாளர்கள், தன்னார்வலர்கள் மற்றும் சமூக உறுப்பினர்களின் அர்ப்பணிப்பைப் பாராட்டியது.

மாலை
எக்ஸ்பிரஸ்
MAALAI EXPRESS
மாலை நாளிதழ்
மாநிலம் பயனுற!

# ஜிப்மரின் சுகாதார தொழில்நுட்ப மதிப்பீட்டு மையத்திற்கு தேசிய விருது



புதுச்சேரி, டிச. 22-

தேசிய அளவில் சான்றுகள் அடிப்படையிலான சுகாதார கொள்கைகளுக்கு ஜிப்மரின் தொடர்ச்சியான செயல்பாடு மற்றும் பங்களிப்புகளுக்கு தேசிய அளவிலான விருது கிடைத்துள்ளது.

நிதி ஆயோக் உறுப்பினர் பால், தேசிய சுகாதார ஆராய்ச்சி துறையின் செயலாளர் ராஜீவ் பாகல் ஆகியோர் டெல்லியில் நடைபெற்ற விழாவில் ஜிப்மரின் சுகாதாரத் தொழில்நுட்ப மதிப்பீட்டு மையத்திற்கு இந்த தேசிய விருதை வழங்கினர்.

இந்த மையம் தேசிய சுகாதார இயக்கம் மற்றும் மாநில அரசுகளுடன் ஒருங்கிணைந்து பல்வேறு ஆராய்ச்சிகளில் ஈடுபட்டு வருகிறது. 29 ஆராய்ச்சி திட்டங்களை நடத்தியுள்ளது. சர்வதேச அளவில் தனது ஆராய்ச்சி முடிவுகளையும் கட்டுரைகளாக வெளியிட்டுள்ளது. ஜிப்பரின் நோய் தடுப்பு மற்றும் சமூக மருத்துவத்துறை தலைவர் சித்தான்சு சேகர்கர் தலைமையில் பல்வேறு துறைகளைச் சார்ந்த நிபுணர்கள் அடங்கிய குழுவினர் இந்த மையத்தை நடத்தி வருகின்றனர்.

இவ்விருது பெற்றதற்காக ஜிப்மர் இயக்குநர் வீர்சிங் நேகி பாராட்டி வாழ்த்து தெரிவித்தார்.